II ADDL COURT TRICHY



DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :135/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -2 (LW -2)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **திரு.வீரமணி** | Caste | : | |
| Father Name | : **திரு.சின்னசாமி** | Calling | : | **காவலர்** |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.07.2026.**

**PW -2 (LW -2 )**

**(**எதிரிகள் ஆஜர்.**)** **(**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.**)**

**முதல் விசாரணை:**

நான் கடந்த 04.12.2024 அன்று திருச்சி மாவட்ட ஆயுதப்படை பிரிவில் காவலராக பணிபுரிந்த போது திருச்சி உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.இப்ராஹிம் அவர்கள் சோதனை மற்றும் கண்காணிப்பு சம்பந்தமாக எங்கள் உயர் அதிகாரிகளிடம் கூறியதன் பேரில் நான் அவருடன் முசிறி தா.பேட்டை ரோட்டில் உள்ள 1–வது எதிரியின் கடைக்கு சென்றோம்.

அங்கு அ.சா.1 சோதனை செய்தார். அங்கு அதன் உரிமையாளர் ஆஜர் எதிரி இருந்தார். சோதனையின் பொழுது தடை செய்யப்பட்ட பாக்குகள் மற்றும் புகையிலை இருந்தது. அவர் அதை கைப்பற்றி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததற்கு நான் உதவியாக இருந்தேன். என்னை முசிறி ஆய்வாளர் விசாரித்தார்.

ADJ COURT, TRICHY

**எ.த.கு.வி** :

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையில் சொன்னீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அன்றைய தினம் நீங்கள் ஆய்வுக்காக கிளம்பிய நேரம் என்ன? |
| **பதில்** | காலை 06.00 மணி. |
| **கேள்வி** | அன்றைய தினம் 1–வது எதிரியின் பெட்டி கடையில் காலை 06.30 மணி போல் ஆய்வு செய்தார்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அதன் பிறகு இன்னும் வேறு கடைகளுக்கு சென்று மீண்டும் அதே கடைக்கு வந்து காலை 11.00 மணிக்கு ஆய்வு செய்தீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த பணியும் செய்யவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. காலை 06.00 மணிக்கு சோதனைக்கு சென்றோம். இரண்டாவது முறை சோதனைக்கு செல்லவில்லை. |

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 10.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 10.07.2026